தமிழ் முரசு

திருவள்ளூர் கூலூர் பகுதியில் செங்கல் தயாரிப்பு பணி மும்முரமாக நடந்து வருகிறது.

அம்பத்தூரில் ஏலச்சீட்டு நடத்தி ₹70 லட்சம் மோசடி

ஆவடி, பிப்.26- அம்பத்தூரில் ஏலச்சீட்டு மற்றும் கடன் வாங்கி ₹70 லட்சம் வரை மோசடி செய்த தம்பதியை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

அம்பத்தூர் ஓரகடம் ஏ.கே.ஏ.நகரை சேர்ந்தவர் கண்ணன். இவரது மனைவி புவனேஸ்வரி (35). இவர், புதூர் போலீஸ் பூத் அருகில் பழக்கடை நடத்தி வருகிறார். இவருக்கும், அம்பத்தூர் அபிராமி தெருவை சேர்ந்த என்எஸ்எஸ் பேஷன் டிசைனர் உரிமையாளர் சுரேஷ் மற்றும் அவரது மனைவி சுதா ஆகியோருக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது. நாளடைவில் புவனேஸ்வரியை சந்தித்த சுதா, தான் 5 லட்சம் ரூபாய் மாதாந்திர ஏலச்சீட்டு நடத்துவதாகவும், இதில் சேர்ந்தால் நல்ல லாபம் கிடைக்கும் எனவும் ஆசைவார்த்தை கூறியுள்ளார்.

இதை நம்பி 2024ம் ஆண்டு 2 லட்சம் ரூபாய் மாதாந்திர ஏலச்சீட்டில் சேர்ந்து புவனேஸ்வரி பணம் கட்டி வந்துள்ளார். ஏலச்சீட்டு முடிந்து பணத்தை திருப்பிகேட்ட போது, வட்டி போட்டு தருவதாக சுதா கூறியுள்ளார். வட்டி தருவதாக ஆசை கூறி மேலும் புவனேஸ்வரியிடம் இருந்து 8 லட்ச ரூபாய் கடனாக பெற்றுள்ளார்.

அதுமட்டுமின்றி புவனேஸ்வரி 1 லட்சம் ரூபாய் தீபாவளி சீட்டு பணம் கட்டி வந்துள்ளார். இதில், உறவினர்கள், தனக்கு தெரிந்தவர்கள் என 83 பேரை சேர்த்துவிட்டு 8.49 லட்சம் ரூபாய் கட்டியுள்ளனர். ஏலச்சீட்டு, கடன் மற்றும் தீபாவளி சீட்டு என 18.49 லட்ச ரூபாய் பெற்றுக் கொண்டு திருப்பி தராமல் ஏமாற்றியுள்ளார். மனைவி சுதாவுக்கு உடந்தையாக கணவர் சுரேஷ் இருந்து வந்துள்ளார். பணத்தை திருப்பி கேட்ட போது மிரட்டியுள்ளனர்.

இதனால் புவனேஸ்வரி, ஆவடி மத்திய குற்றப்பிரிவு போலீசில் கடந்த வாரம் புகார் அளித்தார். அதன்படி இன்ஸ்பெக்டர் சுபாஷினி வழக்குப்பதிவு செய்து விசாரித்தபோது, 2023ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு வரை 30 நபர்களிடம் ஏலச்சீட்டு மற்றும் கடன் பெற்று 70 லட்சம் ரூபாய் வரை மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது. தனிப்படை அமைத்து குற்றவாளிகளை போலீசார் தேடிவந்தனர். இந்நிலையில், விழுப்புரம் மாவட்டம் திருக் கோவிலூர் பகுதியில் தலைமறைவாக இருந்த ஏலச்சீட்டு நடத்தி மோசடியில் ஈடுபட்ட சுரேஷ் (48), சுதா (40) ஆகியோரை நேற்று போலீசார் கைது செய்தனர். பின்னர், பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

தம்பதி கைது

கைது செய்யப்பட்ட தம்பதி

முறையாக வாடகை செலுத்தாததால்

அஷ்டபுஜ பெருமாள் கோயிலுக்கு சொந்தமான ₹6.90 கோடி நிலம் மீட்பு

காஞ்சிபுரம்,பிப்.26- காஞ்சிபுரத்தில் முறையாக வாடகை செலுத்தாததால் அஷ்டபுஜ பெருமாள் கோயிலுக்கு சொந்தமான நிலத்தை அறநிலையத்துறை அதிகாரிகள் அதிரடியாக மீட்டுள்ளனர்.

காஞ்சிபுரத்தில் அஷ்டபுஜப்பெருமாள் கோயில் அருகில் கோயிலுக்கு சொந்தமான நிலம் உள்ளது. இந்த நிலத்தில் உள்ள வீடுகளுக்கு வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் வாடகைக்கு இருந்து வருபவர்கள் முறையாக வாடகை செலுத்தாமல் ரூ.12,87,276 பாக்கி வைத்துள்ளனராம். இதுதொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த 2004ம் ஆண்டு கோயில் நிர்வாகம் சார்பில் வழக்கு தொடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், அஷ்டபுஜ பெருமாள் கோயில் செயல் அலுவலரும், அறங்காவலர் குழுவும் சம்பந்தப்பட்ட வாடகைதார்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என உத்தரவிட்டது.

அதன்படி காஞ்சிபுரம் சரக அறநிலையத்துறை உதவி ஆணையர் கார்த்திகேயன் தலைமையிலான அதிகாரிகள் இடத்தை பார்வையிட்டு, வாடகை பாக்கி வைத்துள்ளவர்களை வெளியேற்றுவது தொடர்பாக காஞ்சிபுரம் இணை ஆணையர் அலுவலகத்தில் புகார் கொடுத்தனர். இதையடுத்து, இணை ஆணையர் உத்தரபடி கோயில் நிலத்தில் வாடகை பாக்கி வைத்தவர்கள் வெளியேற்றப்பட்டு அஷ்டபுஜப்பெருமாள் கோயிலுக்கு சொந்தமான நிலத்தை அறநிலையத்துறை அதிகாரிகளால் மீட்டனர். இந்த சொத்தின் மதிப்பு ரூ.6.90 கோடி இருக்கும் என அறநிலையத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பட்டப்பகலில்

7 பவுன் திருட்டு

ஆர்.கே.பேட்டை, பிப். 26- திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை ஒன்றியம், பெரியராமாபுரம் அருகே கோபாலபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் பெருமாள். இவரது மனைவி சத்யா (49). விவசாய கூலித்தொழிலாளர்கள். நேற்று காலை வீட்டை பூட்டிவிட்டு, கூலிவேலைக்கு சென்றனர். மாலையில் சத்யா வீட்டுக்கு முன்னதாக வந்துள்ளார். அப்போது அவரது வீட்டின் பின்பக்க கதவும் பூட்டும் உடைக்கப்பட்டு திறந்திருப்பதை பார்த்து அதிர்ச்சியானார். அவர் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது, அங்கிருந்த பீரோவை பட்டப்பகலில் மர்ம நபர்கள் உடைத்து, அதில் மறைத்து வைத்திருந்த 7 சவரன் நகைகளைத் திருடி சென்றிருப்பது தெரியவந்தது. மேலும், அதே பகுதியில் சத்யாவின் எதிர் வீட்டின் கதவையும் மர்ம நபர்கள் உடைத்து உள்ளே சென்றுள்ளனர். அங்கு விலையுயர்ந்த பொருட்கள் கிடைக்காத ஏமாற்றத்தில் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது. இப்புகாரின்பேரில் ஆர்.கே.பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

ரயில்வே மேம்பாலம் பணிகள்

திருவள்ளூர் கலெக்டர் திடீர் ஆய்வு

திருவள்ளூர், பிப்.26- திருவள்ளூர் மாவட்டம் செவ்வாய்பேட்டை, வேப்பம்பட்டு மற்றும் திருநின்றவூர் பகுதிகளில் நெடுஞ்சாலை துறையின் மூலம் நடைபெற்றுவரும் ரயில்வே மேம்பாலம் கடவு எண் 13, 14, 15 பணிகளையும் பாலம் அமைப்பதற்கான தூண்களின் பணிகளையும் சென்னை-திருப்பதி தேசிய நெடுஞ்சாலை - 205 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் மாவட்ட கலெக்டர் மு.பிரதாப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ''பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும்'' என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

''செவ்வாய்பேட்டை, வேப்பம்பட்டு, திருநின்றவூர் பகுதிகளில் ரயில்வே மேம்பாலம் கடவு எண் 13, 14, 15 நடைபெற்றுவரும் தூண்களின் பணிகள், பணிகளில் முன்னேற்றம் குறித்தும் தனித்துணை ஆட்சியர் (நில எடுப்பு) அலுவலர்களிடம் விரிவுபடுத்தும் பணிக்காக நிலம் கையகப்படுத்தப்பட்ட விவரங்கள் குறித்தும் பணிகளுக்கு குறிக்கிடாக இருக்கும் மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். வரும் 2026 ஜனவரி மாதத்திற்குள் பாலப்பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்'' என்றார்.

இதையடுத்து சென்னை - திருப்பதி தேசிய நெடுஞ்சாலை - 205 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை திருவள்ளூர் மாவட்டத்தின் புறநகர் பகுதிகளில் திருநின்றவூரில் இருந்து திருப்பாச்சூர் வரை நடைபெற்று வரும் சாலை பணிகளை பார்வையிட்டார்.

வேப்பம்பட்டு பகுதியில் ரயில்வே மேம்பால பணிகளை கலெக்டர் பிரதாப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தண்ணீர் கேட்பதுபோல் நடித்து

மூதாட்டியிடம் 5 பவுன் தாலி செயின் பறிப்பு

திருத்தணி,பிப்.26- திருத்தணி அருகே வீட்டின் அருகில் புளியம் பழம் பறித்துக்கொண்டிருந்த மூதாட்டியிடம் குடிக்க தண்ணீர் கேட்பதுபோல் நடித்து 5 சவரன் தாலி செயின் பறித்து தப்பிய ஆசாமிகள் இருவரை போலீசார் தேடி வருகின்றனர்.

திருத்தணி அருகே வீரகநல்லூர் மேல்மோட்டூர் கிராமத்தை சேர்ந்தவர் முனிரத்தினம். விவசாயி. இவரது மனைவி ரோசியம்மா (60). இவர், நேற்று மதியம் தனது வீட்டின் அருகில் உள்ள புளிய மரத்தில் புளியம்பழம் பறித்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கு பைக்கில் வந்த 2 பேர், சிறிது நேரம் அங்கு செல்போன் பார்த்தபடி மூதாட்டியிடம் குடிநீர் கேட்டுள்ளனர். இதனால் மூதாட்டி ரோசியம்மா, வீட்டிற்குள் தண்ணீர் எடுத்து வரசென்றுள்ளார். சந்தர்ப்பத்தை பயன்படுத்திகொண்ட மர்மநபர்கள், அவரது கழுத்தில் அணிந்திருந்த 5 சவரன் தாலி செயினை பறித்து கொண்டு மின்னல் வேகத்தில் பைக்கில் தப்பினர். இதுகுறித்த புகாரின் பேரில் திருத்தணி போலீசார் வழக்குப்பதிவு செய்து மூதாட்டியிடம் தாலி செயின் பறித்து தப்பிய ஆசாமிகளை தேடி வருகின்றனர்.

லாரி மோதி மாணவன் பலி

ஸ்ரீபெரும்புதூர், பிப்.26- படப்பை அடுத்த செரப்பணஞ்சேரி அண்ணாநகர் பகுதியை சேர்ந்தவர் ஐயப்பன். இவரது மகன் லட்சுமிகாந்தன் (18). மண்ணிவாக்கம் பகுதியில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரில் முதலாமாண்டு பிபிஏ படித்து வந்தார்.

இவர், நேற்று மாலை வழக்கம்போல் கல்லூரி முடிந்ததும் தனது நண்பரான லோகேஷ் என்பவரை பைக்கில் ஏற்றி சென்று ஓரகடத்தில் விட்டுவிட்டு, வண்டலூர்-வாலாஜாபாத் சாலை வழியாக வீடு திரும்பியுள்ளார். ஓரகடம் அடுத்த காரணித்தாங்கல் செக்போஸ்ட் அருகே வந்தபோது, ஓரகடத்தில் இருந்து வண்டலூர் நோக்கி சென்ற கன்டெய்னர் லாரி பைக் மீது உரசியது. இதில், நிலைத்தடுமாறி கீழே விழுந்த லட்சுமிகாந்தன் மீது அதே லாரி சக்கரம் ஏறி இறங்கியதில் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

ஜெயா பொறியியல் கல்லூரியில்

தொழில் துறை தானியங்கி கட்டுப்பாடு பயிற்சி வகுப்பு

திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரியில் தொழில் துறை தானியங்கி கட்டுப்பாடு பயிற்சி வகுப்பினை கல்விகுழும தலைவர் பேராசிரியர் அ.கனகராஜ் குத்துவிளக்கை ஏற்றிவைத்து பேசினார். உடன் இயக்குனர் எஸ்.சுயம்பழகன், கல்லூரி முதல்வர் வி.சுரேஷ்குமார், துறைத் தலைவி சி.கலா ராணி.

திருவள்ளூர், பிப்.26- திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரியில் மின்னணுவியல் மற்றும் கருவி பொறியியல் துறை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் இணைந்து 2 நாட்கள் தொழில் துறை தானியங்கி கட்டுப்பாடு பயிற்சி வகுப்பு நடத்தியது. கல்லூரியின் மின்னணுவியல் மற்றும் கருவி பொறியியல் துறைத் தலைவி சி.கலாராணி வரவேற்று பேசினார். இந்த பயிற்சிக்கு ஜெயா கல்வி குழுமத்தின் தலைவர் பேராசிரியர் அ.கனகராஜ் தலைமை வகித்து குத்து விளக்கை ஏற்றி துவக்கி வைத்து பேசினார். கல்லூரி இயக்குனர் எஸ்.சுயம்பழகன், முதல்வர் வி.சுரேஷ்குமார், பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளித்து பேசினர். 80 க்கும் மேற்பட்ட பல்வேறு கல்லூரிகளை சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். தொழில்துறை தானியங்கி கட்டுப்பாட்டில் புதிய மாற்றங்கள் மற்றும் சாதனைகளை கொண்டு வருவதை நோக்கமாக கொண்டு நடைமுறை கையேடு பயிற்சி மற்றும் விவாதங்கள் நடைபெற்றன. பயிற்சியின் மூலம் மாணவர்கள் தொழில் துறை முன்னேற்றத்திற்கான முக்கிய அறிவு பரிமாற்றங்களை பற்றியும் தொழில்நுட்பத்தின் நவீன பயன்பாடுகளை வலுவூட்டும் வகையிலும் இருந்தன.

சிறுபேர்பாண்டி கிராமத்தில் இருந்து

தாம்பரத்துக்கு அரசு பேருந்து சேவை

க.சுந்தர் எம்எல்ஏ துவக்கினார்

மதுராந்தகம், பிப். 26- சிறுபேர்பாண்டி கிராமத்தில் இருந்து தாம்பரம் பேருந்து நிலையத்துக்கு இன்று காலை பள்ளி மாணவ-மாணவிகளின் பயன்பாட்டுக்கு அரசு பேருந்து சேவையை க.சுந்தர் எம்எல்ஏ பங்கேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் கட்சி நிர்வாகிகள், போக்குவரத்து அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்தில் அடங்கிய சிறுபேர்பாண்டி கிராமத்தில் இருந்து அச்சிறுப்பாக்கம் வழியாக சென்னை தாம்பரம் பேருந்து நிலையத்துக்கு அரசு பேருந்து சேவையை துவக்க வேண்டும் என்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக செயலாளரும் உத்திரமேரூர் எம்எல்ஏவுமான க.சுந்தரிடம் கிராம மக்கள் கோரிக்கை மனு வழங்கி வலியுறுத்தி வந்தனர். இக்கோரிக்கை மனுவை விழுப்புரம் கோட்ட அரசு போக்குவரத்து கழகத்துக்கு க.சுந்தர் எம்எல்ஏ பரிந்துரை செய்தார். அதன்படி, சிறுபேர்பாண்டி கிராமத்தில் இருந்து அச்சிறுப்பாக்கம் வழியாக தாம்பரம் பேருந்து நிலையத்துக்கு அரசு பேருந்து சேவையை துவக்க அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில், சிறுபேர்பாண்டி கிராமத்தில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் இன்று காலை அச்சிறுப்பாக்கம் வழியாக தாம்பரத்துக்கு அரசு பேருந்து சேவை துவக்கவிழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஒன்றியக்குழு பெருந்தலைவர் கண்ணன் தலைமை தாங்கினார். மாவட்ட துணை செயலாளர் கோகுலகண்ணன், கவுன்சிலர்கள் பொன்மலர் சிவகுமார், சாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறுபேர்பாண்டி ஊராட்சி மன்ற தலைவர் சுதாகர் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக செயலாளரும் உத்திரமேரூர் எம்எல்ஏவுமான க.சுந்தர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று, சிறுபேர்பாண்டி கிராமத்தில் இருந்து அச்சிறுப்பாக்கம் வழியாக சென்னை தாம்பரம் பேருந்து நிலையத்துக்கு அரசு பேருந்து சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தார். மேலும், அப்பேருந்தில் பயணம் செய்த பள்ளி மாணவ-மாணவிகள், கட்சி நிர்வாகிகள் மற்றும் கிராம மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். அவருக்கு கிராம மக்கள் நன்றி தெரிவித்தனர். இதில் கட்சி நிர்வாகிகள் மற்றும் போக்குவரத்து கழக அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கே.ஜி.கண்டிகை ஸ்ரீசிவசக்தி

சித்தேஸ்வரர் கோயிலில் மகா சிவராத்திரி விழா

திருத்தணி,பிப்.26- திருத்தணி அருகே கே.ஜி.கண்டிகை செஞ்சம்மா கோனை மலையில் ஸ்ரீசிவசக்தி சித்தேஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோயிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு விழா வெகுவிமரிசையாக கொண்டாடப் பட்டது. விழாவையொட்டி இன்று அதிகாலை கணபதி ஹோம பூஜையுடன் மகா சிவராத்திரி விழா தொடங்கியது. காலை 6 மணிக்கு சித்தேஸ்வரருக்கு அபிஷேகம் நடைபெற்றது. சர்வ தரிசன அலங்காரத்தில் பக்தர்களுக்கு சாமி அருள் பாலித்தார். திருத்தணி, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராள மான பக்தர்கள் மலைகோயிலுக்கு வந்து வரிசையில் காத்திருந்து சிவபெருமானை வழிபட்டு வருகின்றனர். இதனால் மலைக்கோயிலில் பக்தர்களின் கூட்டம் அதிகரித்துள்ளது.

பக்தர்கள் சாமி தரிசனம்

இதையடுத்து சித்தேஸ்வரருக்கு அர்த்தநாரீஸ்வரர் அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. விழாவில். வி.கே.ஆர்.புரம் கிராமத்தை சேர்ந்த திரைப்பட துறை ப்ரோடக்ஷன் மேலாளர் துரைராஜ் குடும்பத்தினர் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். விழா ஏற்பாடுகளை ஸ்ரீசிவசக்தி ஆஞ்சநேயர் சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் செய்யப்பட்டுள்ளது. இன்று காலை முதல் நள்ளிரவு வரை தொடர்ந்து சாமிக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறும் என கோயில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி ஆண்டு விழா

ஆவடி, பிப்.26- ஆவடி அடுத்த முத்தாபுதுப்பேட்டையில் உள்ள ஆலிம் முகமது சாலிக் பாலிடெக்னிக் கல்லூரியின் 29வது ஆண்டு விழா மற்றும் விளையாட்டு தின விழா நேற்று நடந்தது. கல்லூரி செயலாளர் முகமது சாலிக் தலைமை வகித்தார். விழாவில், பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசு கோப்பை வழங்கப்பட்டது.

விழாவில், கல்லூரி செயலர் முகமது சாலிக் பேசுகையில், "மாணவர்கள் மனம். உடல் அளவில் சோர்வாகாமல் இருக்க கல்வி மட்டுமல்ல விளையாட்டிலும் ஈடுபாடு இருக்கவேண்டும்" என்றார். இதைத்தொடர்ந்து கல்லூரி மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பரதநாட்டியம், யோகா உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் நடந்தது.

தமிழகத்தில் மும்மொழி கொள்கை ஒருபோதும் வராது

சசிகாந்த் செந்தில் எம்பி பேட்டி

புழல், பிப்.26- புழல் நாகப்பா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் பகுதியில் உள்ள தனியார் நிறுவனங்கள் சார்பில், கதிர்வேடு 31வது வார்டு மேம்பாட்டு பணிக்காக மாநகராட்சி கவுன்சிலர் சங்கீதா பாபு மூலம் மாதவரம் மாநகராட்சி அதிகாரிகளிடம் ரூ.20 லட்சம் வழங்கும் நிகழ்ச்சி புழல் அடுத்த கதிர்வேடு பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், கவுன்சிலர் சங்கீதாபாபு ஆகியோர் கலந்து கொண்டு ₹20 லட்சத்துக்கான காசோலை மாதவரம் மண்டல அதிகாரியிடம் வழங்கினர். அப்போது எம்பி, தனியார் நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்ட 20 லட்ச ரூபாய், 31வது வார்டு பகுதியில் உள்ள சென்னை கதிர்வேடு அரசு துவக்கப் பள்ளி கட்டிட பணிக்காக உபயோகப்படுத்தப்படும் என தெரிவித்தார். மேலும் நிருபர்களிடம் கூறுகையில், "மக்கள் நேரத்தை வீணடிக்காமல் ஒன்றிய அரசு பயனுள்ள வேலையை செய்ய வேண்டும். தமிழகத்தில் ஒருபோதும் மும்மொழி கொள்கை சாத்தியமற்றவை. மக்கள் மனதை திசை திருப்பவே இது போன்ற செயல்களில் ஒன்றிய அரசு ஈடுபட்டு வருகிறது" என்றார். விழாவில், சென்னை மாநகராட்சி மாதவரம் மண்டல அதிகாரி திருமுருகன், பொறியாளர் கார்த்திகேயன், உதவி செயற் பொறியாளர் ஜெயலஷ்மி, திருவள்ளூர் நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் அமைப்பாளர் ஏ.ஜி.சிதம்பரம், திருவள்ளூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் துணை தலைவர் கதிர்வேடுபாபு, உதவி பொறியாளர் லோகேஷ், காங்கிரஸ் சர்க்கிள் தலைவர்கள் சந்திரசேகர், ஏ.பி. சங்கர், 31வது வார்டு திமுக நிர்வாகிகள் பொன்.சதீஷ்குமார், எம்ஜிஆர் நகர் சரவணன், விஜய் சந்தர் மற்றும் திமுக, காங்கிரஸ் நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள், பொது மக்கள் கலந்துகொண்டனர்.

நாளை நல்ல நாளே

விஞ்ஞான ஜோதிடர் ஆம்பூர் வேல்முருகன்

குரோதி வருடம்

மாசி மாதம் - 15ம் நாள்

27.2.2025 வியாழக்கிழமை



ஸ்ரீ குரு ராகவேந்திரரை வணங்குங்கள்

- அமாவாசை
- சதுர்த்தசி திதி காலை 8.55 மணி வரை; பிறகு அமாவாசை.
- அவிட்டம் நட்சத்திரம் மாலை 3.43 மணி வரை; பிறகு சதயம்
- யோகம்: சித்த யோகம்
- சர்வ அமாவாசை.
- நல்ல நேரம்: 10.30 - 11.30
- ராகு காலம்: மதியம் 1.30 - 3.00.
- எமகண்டம்: காலை 6.00 - 7.30.
- சூலம்: தெற்கு; பரிகாரம்: தைலம்.

கலை அறிவியல் வணிகம் தொடர்பான கல்வி கற்க, கால்நடை வாங்க, வெளிநாடு பயணம் செல்ல செய்ய நன்று.

கோவை ஸ்ரீகோணியம்மன் கிளி வாகன சேவை

மேஷம்	:	காரிய பலிதம்	துலாம்	:	கவுரவ பதவி
ரிஷபம்	:	விஜபியின் நட்பு	விருச்சிகம்	:	நிர்வாக திறமை
மிதுனம்	:	பிரச்னைக்கு தீர்வு	தனுசு	:	சந்தோஷ அனுபவம்
கடகம்	:	நாவடக்கம் தேவை	மகரம்	:	மன நிறைவு
சிம்மம்	:	பொறுப்பு கூடும்	கும்பம்	:	பதட்டம் விரக்தி
கன்னி	:	முக்கிய முடிவுகள்	மீனம்	:	அனாவசிய செலவு

சந்திராஷ்டமம்: பூசம், ஆயில்யம்.